# LITERATURE IN TAMIL

# தமிழ் இலக்கியம்

## GCE Ordinary Level (2020)

## (Syllabus 2033)

**உள்ளடக்கம்**


| | பக்கம் |
|---|---|
| பாடத்திட்ட நோக்கங்கள் | **2** |
| மதிப்பீட்டின் நோக்கங்கள் | **2** |
| தேர்வு அமைப்புமுறை | **3** |
| தேர்வு விவர அட்டவணை | **6** |


**Singapore Examinations and Assessment Board**

© MOE

## 1. பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட ‘தமிழ்மொழி இலக்கியப் பாடத்திட்டம் 2019’ பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது:

- தமிழ் இலக்கியத்தின் வடிவங்களான மரபுக்கவிதைகள், தற்காலக் கவிதைகள், நாவல், சிறுகதைகள் ஆகியவற்றை அடையாளம் காணவும் அவற்றைப் போற்றவும் அறிந்திருத்தல்
- இலக்கியம் பற்றிய புரிந்துணர்வை அறிமுகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கையோடு ஒப்பிட்டு அறியும் திறனை அறிந்திருத்தல்
- இலக்கியங்கள் உணர்த்தும் விழுமியங்களை அறிந்துகொண்டு போற்ற அறிந்திருத்தல்
- படைப்பாக்கத்திறன் வெளிப்பாட்டிலும் கலைத்திறன் வெளிப்பாட்டிலும் இலக்கியத்தின் பங்கினைப் புரிந்துகொள்ளும் மாண்பினைப் பெற்றிருத்தல்
- தமிழ் மரபையும் பண்பாட்டையும் அறிந்துகொள்வதோடு தமிழ்மொழி தொடர்பான அறிவையும் ஆழப்படுத்துதல்

## 2. மதிப்பீட்டின் நோக்கங்கள்

உயர்நிலைப்பள்ளியில் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின்வழி மேற்கண்ட கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட மரபுக்கவிதைகள், தற்காலக் கவிதைகள், நாவல், கட்டுரைகள், சிறுகதைகள் ஆகியவை உணர்த்தும் கருத்துகள், உட்பொருள் முதலானவற்றை அடையாளங்கண்டு அவற்றையொட்டிய தமது ஆழ்ந்த புரிந்துணர்வைத் தெளிவாகவும் தொடர்புபடவும் சுயப்படைப்புத் திறனுடனும் வெளிப்படுத்துதல்

- இலக்கியப் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட வெவ்வேறு வகை இலக்கியங்களின் கதைக்கரு, பின்னணி, கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு, நடை, மொழி, தலைப்பு, இலக்கிய ஆசிரியர் உணர்த்த விரும்பும் விழுமியங்கள், படிப்பினைகள், கையாண்டுள்ள உத்திகள் முதலானவற்றைப்பற்றித் திறனாய்வு நோக்கில் ஆய்ந்தறிந்து கருத்துரைக்கும் திறனைப் பெற்றிருத்தல்

- பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்படாத தற்காலக் கவிதைகளையும் சிறுகதைகளையும் பொருளுணர்ந்து படித்து அவற்றைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிட்டுக் கருத்துரைக்கும் திறனைப் பெற்றிருத்தல்

## 3. தேர்வு அமைப்புமுறை

இத்தேர்வு மொத்தம் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

தமிழ் இலக்கியத் தேர்வு எழுதும் மாணவர்கள் 2033/1 மற்றும் 2033/2 ஆகிய இரண்டு வினாத்தாள்களுக்கும் விடையெழுத வேண்டும்.

சமூகவியல் (Social Studies) பாடத்துடன் தமிழ் இலக்கியத்தை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் 2289/2 எனும் வினாத்தாளுக்கு மட்டுமே விடையெழுத வேண்டும்.

**வினாத்தாள் 1: (1 மணி 30 நிமிடங்கள், 50 மதிப்பெண்கள்)**

இத்தாள் **'அ'**, **'ஆ'** ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது. மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து ஆக மொத்தம் இரண்டு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**'அ' பிரிவு: நாவல் மற்றும் கட்டுரைகள்**

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் மாணவர்கள் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடையெழுத வேண்டும். நாவலிலிருந்து ஒரு வினாவும் கட்டுரைகளிலிருந்து ஒரு வினாவும் கேட்கப்படலாம் அல்லது இரு வினாக்களும் நாவலிலிருந்தோ கட்டுரைகளிலிருந்தோ கேட்கப்படலாம்.

- **நாவல்**

  வைகறைப்பூக்கள் - மா இளங்கண்ணன்

- **கட்டுரைகள்**

  1. சங்க இலக்கியமும் மனிதாபிமான சிந்தனைகளும் – தில்லைநாதன்
  2. உள்ளம் என்னும் உயர்ந்த சொத்து – அகிலன்
  3. உலகிற்கு உப்பாக இருங்கள் – எஸ் ராமகிருஷ்ணன்
  4. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - ந பிச்சமூர்த்தி

**‘ஆ’ பிரிவு: செய்யுள்கள்**

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் மாணவர்கள் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடையெழுத வேண்டும்.

**செய்யுள்கள்**

1. திருக்குறள்
   - ஒழுக்கமுடைமை (குறள்கள் 136, 137, 138, 139, 140)
   - தெரிந்து செயல்வகை (குறள்கள் 461, 465, 466, 467, 469)
   - ஊக்கமுடைமை (குறள்கள் 592, 595, 596, 597, 600)
   - பண்புடைமை (குறள்கள் 991, 992, 995, 996, 1000)

2. நாலடியார்
   - சினமின்மை (63)
   - பொறையுடைமை (74)
   - நட்பாராய்தல் (211)
   - அறிவின்மை (256)

3. புரட்சிக்கவி (முழுவதும்) – பாரதிதாசன்
4. தமிழ் வாழ்க – நாமக்கல் கவிஞர்
5. மயில் – சுரதா
6. அழகு – பாரதிதாசன்
7. உறுதி வேண்டும் – பாரதியார்

**<u>வினாத்தாள் 2</u>: (1 மணி 40 நிமிடங்கள், 50 மதிப்பெண்கள்)**

இத்தாள் **‘அ’**, **‘ஆ’** ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது. மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**‘அ’ பிரிவு: சிறுகதைகள் மற்றும் தற்காலக் கவிதைகள்**

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். மாணவர்கள் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடையெழுத வேண்டும். தற்காலக் கவிதைகளிலிருந்து ஒரு வினாவும் சிறுகதைகளிலிருந்து ஒரு வினாவும் கேட்கப்படலாம் அல்லது இரு வினாக்களும் சிறுகதைகளிலிருந்தோ தற்காலக் கவிதைகளிலிருந்தோ கேட்கப்படலாம்.

- **சிறுகதைகள்**

1. கூரை ஓட்டில் ஓர் எலி - ரெ. கார்த்திகேசு
2. முகவரிப் புத்தகம் - ரம்யா நாகேஸ்வரன்
3. அன்பளிப்பு – கு அழகிரிசாமி
4. பிரயாணம் – அசோகமித்திரன்
5. கலையின் விலை – அகிலன்
6. அடுக்குமாடி அனாதைகள் - நவமணி சுந்தரம்

- **தற்காலக் கவிதைகள்**

1. நரை - கவிஞர் வாலி
2. இன்பம் - சுரதா
3. ஏனோ? - பார்வதி பூபாலன்
4. நலமெல்லாம் நம்மாலே - க.து.மு.இக்பால்
5. பணி - மு தங்கராசன்

**‘ஆ’ பிரிவு: இலக்கியத் திறனாய்வு**
(பார்த்திராத பனுவல்கள் – சிறுகதை மற்றும் தற்காலக் கவிதை)

இப்பிரிவில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். ஒரு வினா தற்காலக் கவிதையையும் மற்றொரு வினா சிறுகதையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். இவற்றுள் மாணவர்கள் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து விடையெழுத வேண்டும்.

இவ்விரு வினாக்களில் பயன்படுத்தப்படும் இலக்கியப் பகுதிகள் பாடத்திட்டத்தில் பரிந்துரைக்கப்படாதவை. இலக்கிய நூல்கள், இதழ்கள், இணையம் முதலியவற்றில் இடம்பெறுகின்ற சிறுகதைகளும் தற்காலக் கவிதைகளும் தேர்வுக்கு உரியனவாக அமையும்.

## 4. தேர்வு விவர அட்டவணை

### சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண நிலைத் தேர்வு

### தமிழ் இலக்கியம்

### தாள் 1 மற்றும் தாள் 2

| தாள் (நேரம்) | பாடப்பொருள் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | விடையளிக்க வேண்டியவை | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|
| **2033/1**<br>(1 மணி 30 நிமிடங்கள்) | **<u>‘அ’ பிரிவு</u>**<br>நாவல் மற்றும் கட்டுரைகள் | சுயவிடை | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |
| | **<u>‘ஆ’ பிரிவு</u>**<br>செய்யுள்கள் | | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |
| **2033/2**<br>(1 மணி 40 நிமிடங்கள்) | **<u>‘அ’ பிரிவு</u>**<br>சிறுகதைகள் மற்றும் தற்காலக் கவிதைகள் | சுயவிடை | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |
| | **<u>‘ஆ’ பிரிவு</u>**<br>இலக்கியத் திறனாய்வு<br><br>(பார்த்திராத பனுவல்-சிறுகதை மற்றும் தற்காலக் கவிதை) | | 2 | 1 | 25 மதிப்பெண்கள் |